# Psa

## Chapter 90

Tamil Interlinear

Reference: Tamil Indian Revised Version (IRV)

1

| | | |
|---|---|---|
| תְּפִלָּה | ஜெபம் | H8605 |
| לְמֹשֶׁה | மோசேக்கு | H4872 |
| אִישׁ־ | மனிதனாகிய- | H0376 |
| הָאֱלֹהִים | தேவனின் | H0430 |
| אֲדֹנָי | ஆண்டவரே | H0136 |
| מָעוֹן | அடைக்கலம் | H4583 |
| אַתָּה | நீர் | |
| הָיִיתָ | இருந்தீர் | H1961 |
| לָּנוּ | எங்களுக்கு | |
| בְּדֹר | தலைமுறை- | H1755 |
| וָדֹר׃ | தலைமுறையாக | H1755 |

தேவனுடைய மனிதனாகிய மோசேயின் ஜெபம். ஆண்டவரே, தேவனே நீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்.

2

| | | |
|---|---|---|
| בְּטֶרֶם | முன்னே | H2962 |
| הָרִים | மலைகள் | H2022 |
| יֻלָּדוּ | பிறக்கும் | H3205 |
| וַתְּחוֹלֵל | உருவாக்கினீர் | |
| אֶרֶץ | பூமியை | H0776 |
| וְתֵבֵל | உலகத்தையும் | H8398 |
| וּמֵעוֹלָם | நித்தியத்திலிருந்து | H5769 |
| עַד־ | நித்தியம்- | H5704 |
| עוֹלָם | நித்தியம்வரை | H5769 |
| אַתָּה | நீர் | |
| אֵל׃ | தேவன் | H0410 |

மலைகள் தோன்றுமுன்பும், நீர் பூமியையும், உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாக இருக்கிறீர்.

3

| | | |
|---|---|---|
| תָּשֵׁב | திருப்புகிறீர் | H7725 |
| אֱנוֹשׁ | மனிதனை | H0582 |
| עַד־ | நொறுக்கம்- | H5704 |
| דַּכָּא | நொறுக்கமட்டும் | |
| וַתֹּאמֶר | சொல்கிறீர் | H0559 |
| שׁוּבוּ | திரும்புங்கள் | H7725 |
| בְנֵי־ | ஆதாமின்- | |
| אָדָם׃ | புத்திரர்களே | H0120 |

நீர் மனிதர்களைத் தூளாக்கி, மனித சந்ததிகளை, திரும்புங்கள் என்கிறீர்.

4

| | | |
|---|---|---|
| כִּי | ஏனெனில் | |
| אֶלֶף | ஆயிரம் | H0505 |
| שָׁנִים | ஆண்டுகள் | H8141 |
| בְּעֵינֶיךָ | உமது-கண்களில் | |
| כְּיוֹם | நேற்றைய-நாளைப்போல் | H3117 |
| אֶתְמוֹל | நேற்று | H0865 |
| כִּי | கடந்துபோகும் | |
| יַעֲבֹר | கடந்துபோகும் | |
| וְאַשְׁמוּרָה | இரவின்-ஜாமம்போல் | H0821 |
| בַלָּיְלָה׃ | இரவில் | H3915 |

உமது பார்வைக்கு ஆயிரம் வருடங்கள் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இரவுவேளைபோலவும் இருக்கிறது.

5

| | | |
|---|---|---|
| זְרַמְתָּם | அடித்துக்கொண்டுபோகிறீர் | H2229 |
| שֵׁנָה | தூக்கத்தைப்போல் | H8142 |
| יִהְיוּ | ஆவார்கள் | H1961 |
| בַּבֹּקֶר | காலையில் | H1242 |
| כֶּחָצִיר | புல்லைப்போல் | |
| יַחֲלֹף׃ | மாறிப்போகும் | H2498 |

அவர்களை வெள்ளம்போல் அடித்துக்கொண்டு போகிறீர்; தூக்கத்திற்கு ஒப்பாக இருக்கிறார்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாக இருக்கிறார்கள்.

6
בַּבֹּקֶר காலையில் H1242
יָצִיץ பூக்கும்
וְחָלָף வளரும் H2498
לָעֶרֶב மாலையில் H6153
יְמוֹלֵל வாடிப்போகும்
וְיָבֵשׁ׃ உலர்ந்துபோகும் H3001

> அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுக்கப்பட்டு உலர்ந்துபோகும்.

7
כִּי־ ஏனெனில்-
כָלִינוּ அழிந்தோம் H3615
בְאַפֶּךָ உமது-கோபத்தினால் H0639
וּבַחֲמָתְךָ உமது-உக்கிரத்தினால் H2534
נִבְהָלְנוּ׃ கலங்கினோம் H0926

> நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து உமது கடுங்கோபத்தினால் கலங்கிப்போகிறோம்.

8
]שת[ வைத்தீர் H7896
)שַׁתָּה( வைத்தீர் H7896
עֲוֹנֹתֵינוּ எங்கள்-அக்கிரமங்களை H5771
לְנֶגְדֶּךָ உமக்கு-முன்பாக H5048
עֲלֻמֵנוּ எங்கள்-இரகசியப்-பாவங்களை H5956
לִמְאוֹר உமது-முகத்தின்-ஒளியில் H3974
פָּנֶיךָ׃ உமது-முகம் H6440

> எங்களுடைய அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்களுடைய மறைவான பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.

9
כִּי ஏனெனில்
כָל־ எல்லா- H3605
יָמֵינוּ எங்கள்-நாட்கள் H3117
פָּנוּ கடந்துபோயின H6437
בְעֶבְרָתֶךָ உமது-கோபத்தில் H5678
כִּלִּינוּ முடித்தோம் H3615
שָׁנֵינוּ எங்கள்-ஆண்டுகளை H8141
כְמוֹ־ ஒரு-பெருமூச்சைப்போல்- H3644
הֶגֶה׃ பெருமூச்சு H1899

> எங்களுடைய நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப்போல் எங்கள் வருடங்களைக் கழித்துப்போட்டோம்.

10
יְמֵי־ நாட்கள்- H3117
שְׁנוֹתֵינוּ எங்கள்-ஆயுளின் H8141
בָהֶם அவைகளில்
שִׁבְעִים எழுபது H7657
שָׁנָה ஆண்டுகள் H8141
וְאִם அல்லது
בִּגְבוּרֹת பலமிருந்தால்- H1369
שְׁמוֹנִים எண்பது H8084
שָׁנָה ஆண்டுகள் H8141
וְרָהְבָּם அவைகளின்-பெருமையும் H7296
עָמָל வருத்தம் H5999
וָאָוֶן துக்கமே H0205
כִּי־ ஏனெனில்-
גָז விரைவாய் H1468
חִישׁ கடந்துபோகும் H2440
וַנָּעֻפָה׃ பறந்துபோவோம்

> எங்களுடைய ஆயுள் நாட்கள் எழுபது வருடங்கள், பெலத்தின் மிகுதியால் எண்பது வருடங்களாக இருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கரமாகக் கடந்து போகிறது. நாங்களும் பறந்துபோகிறோம்.

11
מִי־ யார்- H4310
יוֹדֵעַ அறிவான் H3045
עֹז வல்லமையை H5797
אַפֶּךָ உமது-கோபத்தின் H0639
וּכְיִרְאָתְךָ உமது-பயத்திற்கேற்ப H3374
עֶבְרָתֶךָ׃ உமது-உக்கிரத்தை H5678

> உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படக்கூடிய விதமாக உமது கடுங்கோபத்தையும் அறிந்துகொள்கிறவன் யார்?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| לְבַב | וְנָבִא | הוֹדַע | כֵּן | יָמֵינוּ | לִמְנוֹת | 12 |
| இருதயத்தை | பெறுவோம் | கற்பியும் | அவ்வாறு | எங்கள்-நாட்களை | எண்ணக்- | |
| H3824 | H0935 | H3045 | | H3117 | H4487 | |

| |
|---|
| חָכְמָה׃ |
| ஞானமுள்ள |
| H2451 |

> நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்களுடைய நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| עַל־ | וְהִנָּחֵם | מָתָי | עַד־ | יְהוָה | שׁוּבָה | 13 |
| உமது- | இரக்கம்-காட்டும் | எதுவரை | எதுவரை- | யெகோவாவே | திரும்பும் | |
| | H5162 | H4970 | H5704 | H3068 | H7725 | |

| |
|---|
| עֲבָדֶיךָ׃ |
| ஊழியக்காரர்-மேல் |
| H5650 |

> யெகோவாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாக இருப்பீர்? உமது அடியார்களுக்காகப் பரிதபியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| וּנְרַנְּנָה | חַסְדֶּךָ | בַבֹּקֶר | שַׂבְּעֵנוּ | 14 |
| ஆனந்தமாய்-பாடுவோம் | உமது-கிருபையினால் | காலையில் | திருப்தியாக்கும் | |
| | | H1242 | H7646 | |

| | | |
|---|---|---|
| יָמֵינוּ׃ | בְּכָל־ | וְנִשְׂמְחָה |
| எங்கள்-நாட்களிலும் | எல்லா- | மகிழ்ச்சியடைவோம் |
| H3117 | H3605 | H8055 |

> நாங்கள் எங்களுடைய வாழ்நாட்களெல்லாம் சந்தோஷித்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| רָעָה׃ | רָאִינוּ | שְׁנוֹת | עִנִּיתָנוּ | כִּימוֹת | שַׂמְּחֵנוּ | 15 |
| தீமை | கண்ட | ஆண்டுகளுக்கேற்ப | சிறுமைப்படுத்தின | நாட்களுக்கேற்ப | மகிழ்ச்சியாக்கும் | |
| | H7200 | H8141 | | H3117 | H8055 | |

> தேவனே நீர் எங்களை சிறுமைப்படுத்திய நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருடங்களுக்கும் இணையாக எங்களை மகிழ்ச்சியாக்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וַהֲדָרְךָ | פָעֳלֶךָ | עֲבָדֶיךָ | אֶל־ | יֵרָאֶה | 16 |
| உமது-மகத்துவம் | உமது-செயல் | ஊழியக்காரர்களுக்கு | உமது- | தெரிவிக்கப்படட்டும் | |
| H1926 | H6467 | H5650 | H0413 | H7200 | |

| | |
|---|---|
| בְּנֵיהֶם׃ | עַל־ |
| புத்திரர்-மேல் | அவர்களுடைய- |

> உமது செயல்கள் உமது ஊழியக்காரர்களுக்கும், உமது மகிமை அவர்களுடைய பிள்ளைகளுக்கும் விளங்குவதாக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| וּמַעֲשֵׂה | עָלֵינוּ | אֱלֹהֵינוּ | אֲדֹנָי | נֹעַם | וִיהִי | 17 |
| செயல் | எங்கள்-மேல் | எங்கள்-தேவனின் | ஆண்டவராகிய | தயவு | இருப்பதாக | |
| H4639 | | H0430 | H0136 | H5278 | H1961 | |

| | | | | |
|---|---|---|---|---|
| יָדֵינוּ | וּמַעֲשֵׂה | עָלֵינוּ | כּוֹנְנָה | יָדֵינוּ |
| எங்கள்-கைகளின் | செயலை | எங்கள்-மேல் | நிலைநிறுத்தும் | எங்கள்-கைகளின் |
| H3027 | H4639 | | | H3027 |

| |
|---|
| כּוֹנְנֵהוּ׃ |
| நிலைநிறுத்தும் |

> எங்களுடைய தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக; எங்களுடைய கைகளின் செயல்களை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்களுடைய கைகளின் செயல்களை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.